**செ.வெ.எண் :703** **நாள்: 28.10.2021**

**<u>பத்திரிக்கை செய்தி</u>**

எதிர்வரும் 04.11.2021 அன்று தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நியாய விலைக் கடைகள் மூலம் வழங்கப்படும் பொது விநியோகத் திட்டப் பொருள்களை குடும்ப அட்டைதாரர்கள் எவ்வித சிரமமுமின்றி முன்னதாகவே பெற்றுக்கொள்ள ஏதுவாக 01.11.2021, 02.11.2021 மற்றும் 03.11.2021 ஆகிய நாட்களில் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து பொது விநியோக அங்காடிகளும் காலை 08.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை செயல்படும் எனவும், மேற்கண்ட நாட்களில் குடும்ப அட்டைதாரர்கள் அவர்களுக்கு உரிய பொது விநியோகப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளலாம் எனவும், இந்த நாட்களில் அத்தயாவசியப் பொருட்களைப் பெறாதவர்கள் தீபாவளிப் பண்டிகை முடிந்து 08.11.2021 முதல் பொருட்களை பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. பொதுமக்கள் கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி முககவசம் அணிந்து வந்து பொருட்களை பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.**